பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 25 புதன்கிழமை 09.06.2021 கதிர் 216

## இது ரகசியம் அல்ல!

பல இராஜதந்திர விடயங்கள் காதும் காதும் வைத்தாற்போல பேசி முடிக்கப்பட்டு விடும். விவகாரம் வெளியே தெரிவதற்குப் பல காலம் பிடிக்கலாம்.

அமெரிக்க அரசின் தொண்டு நிறுவனமான யு.எஸ்.எய்ட் அமைப்பு அமெரிக்க பக்கம்02

# பிரிட்டனில் புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி தொடர் நடவடிக்கைகள்

## உயர் மட்ட சந்திப்புக்களில் புலம்பெயர் சமூகம் தீவிரம்

லண்டன், ஜூன் 08

பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு அந்நாட்டு அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக அந் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெறும் கலந்துரையாடல்கள் பிரித்தானியா வாழ்புலம்பெயர் தமிழர்களால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஈஸ்ட்ஹாம் தொகுதிக்கான தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் டைம்ஸ் அவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்ட குழுவினர், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு ஆதரவாக பிரிட்டன் நாடாளுமன்றில் குரல் எழுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். 2



## நேற்று மட்டும் 2,637 பேருக்கு கொரோனா

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 637 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 10 ஆயிரத்து 616 ஆக அதிகரித்துள்ளது. 2

# ரணிலுடன் சங்கமிப்பர் சஜித் அணியின் 15 பேர்

## அடுத்த அமர்வில் அவரே எதிர்க்கட்சித் தலைவர்; நாடாளுமன்றில் மஹிந்தானந்த பரபரப்பு தகவல்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்தவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் 15 உறுப்பினர்கள் அவருடன் இணைந்துகொள்ளவுள்ளனர். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அவரே எதிர்க்கட்சித் தலைவர் என்பதை எதிரணியினர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். 2



## ரணிலுடன் எவரும் இணையமாட்டோம்

### சஜித் அணி திட்டவட்டம்

சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என வெளியாகும் தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது. 2

## மேலும் 54 பேர் கொரோனாவால் சாவு; ஒரே நாளில் அதிக சாவு எண்ணிக்கை

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 54 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதுவே ஒரே நாளில் வெளியிடப்பட்ட அதிக கொரோனா மரணங்களின் எண்ணிக்கையாகும்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 22 பெண்களும், 32 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,844 ஆக அதிகரித்துள்ளது.

## கீரிமலை ஜனாதிபதி மாளிகை கூறு விலையில் வெளியாருக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கீரிமலையில் மக்களின் நிலத்தில் அடாத்தாக அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை கூறுவிலை கோரல் மூலம் வெளியாருக்கு வழங்கப்படவுள்ளது.

வலிகாமம் வடக்கின் பெரும்பகுதி படையினரின் ஆக்கிரமிப்பில் உயர் பாதுகாப்பு 2

## அதிபர் மக்ரோனை நெருங்கி முகத்தில் அறைந்த இளைஞர்

### பிரான்ஸில் நேற்று சம்பவம்

இளைஞர் ஒருவர் பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் முகத்தில் அறைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தத் தாக்குதல் தொடர்பாக 2



## Education Page

வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ் வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் Kalaikkathiredu@gmail.com

மறக்காமல் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

## யாழில் நேற்று 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

### வடக்கில் 55 பேர் அடையாளம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்தும் நேற்று 55 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் 2

## தரம் 1 அனுமதிக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஜூலை 31 வரை நீடிப்பு

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 1 அனுமதிக்கு விண்ணப்பிக்கும் காலக்கெடு எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராஜதந்திரியான இரும்புச் சீமாட்டி சமந்தா பவரின் கீழ் இயங்குகின்றமை குறித்தும் –

அந்த அமைப்பின் பெயரில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சிலர், சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் நுழைந்து, சத்தம் சந்தடியின்றி கைங்கரியங்களில் ஈடுபட்டிருக்கின்றமை இலங்கைத் தரப்பில் சீற்றத்தை உண்டு பண்ணியிருப்பது பற்றியும் –

இலங்கையின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இது குறித்து அதிகம் பேசப்பட்டமையை அடுத்து மேற்படி அமைப்பின் இலங்கை நடவடிக்கைகள், செயற்பாடுகள் பிய்த்து உதறப்படலாம் எனக் கருதப்படுகின்றது என்ற விவரம் குறித்தும் –

கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்துவது குறித்தே பேசப்பட்டது என்ற அறிக்கை வெளியாவது 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதை மாதிரித் தான் தெரிகின்றது.

மக்கள் காதில் பூச்சுற்றும் இராஜதந்திரம் என்பது இதுதானோ?

கேள்வி – ஒன்றுதான். விடயத்தை அறிந்து இலங்கை அரசுத் தரப்பே அமெரிக்கத் தரப்பை அழைத்து நேரடியாகக் கேட்டு விடயத்தை முடித்ததா? அல்லது தங்கள் குட்டு அம்பலமானமையை அடுத்து அமெரிக்கத் தரப்பே முந்திக் கொண்டு போய், ஜனாதிபதியைச் சந்தித்து, மூடி மறைத்து சமாளிக்க முற்பட்டதா? தெரியவில்லை.

ஆனால், 'சமாளிபிகேஷன்' மட்டும் கனகச்சிதமாக நிறைவேறி விட்டது போலத் தான் தோன்றுகின்றது.



கடந்த நாள்களில் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

முன்னாள் அமெரிக்கப் பிரஜையான – இப்போதும் அமெரிக்காவில் தன் நலன்களைக் கொண்டுள்ள – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமெரிக்கத் தரப்புக்கு எதிரான இத்தகைய நோண்டல்கள், நுணுக்கமான புலனாய்வுகள் போன்றவை அரசியல், இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட நெருக்கடிகளைத் தருவனவாக அமையக் கூடும் என நேற்றுமுன்தினம் எனது பத்தியில் முத்தாய்ப்பு வைத்திருந்தேன்.

என் கணக்கீடு சரிதான் போலத் தோன்றுகின்றது.

மேற்படி விவகாரத்தை ஒட்டி அமெரிக்கத் தரப்பு நேரடியாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்துப் பேசியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

யு.எஸ்.எயிட் அமைப்பின் இலங்கை அலுவலகத்தின் இயக்குநர் றீட் ஜே. அச்சில்மன், அந்த அமைப்பின் திட்டப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் பொலி ஆகியோர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதவர் மார்ட்டின் கெலியுடன் சென்று ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர மற்றும் சில அதிகாரிகள் ஜனாதிபதியுடன் இருந்திருக்கின்றார்கள்.

அமெரிக்கத் தரப்புடன் ஏற்பட்ட கசப்புணர்வுகளை சமாளிக்கும் விதத்தில் பேச்சு நடந்து முடிந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

பேச்சின் முடிவில் இலங்கையில் யு.எஸ்.எய்ட் அமைப்பின் நன்கொடைத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கு இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது என்று குறிப்பிடும் அறிக்கை ஒன்றை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டது.

எங்களுக்குள் பிரச்சினை ஏதும் இல்லை, நாங்கள் அமெரிக்க உதவித் திட்டங்கள் பற்றியே பேசினோம் என்ற கருத்தை வலிந்து பிரதிபலிப்பது போல அந்த அறிக்கை அமைந்திருந்தது.

அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் அமைப்பின் பெயரில் இலங்கைக்குள் அமெரிக்க இராணுவத்தினர் ஊடுருவி சில, பல நாசகார வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் பரபரப்புடனும், சீற்றத்துடனும் ஆராய முற்படுகையில் –

அந்த நெருக்கடியின் உச்சத்துக்குள் அமெரிக்கத் துணைத் தூதுவர் சகிதம் அந்த அமைப்பின் உயர் தலைகள் இரண்டு நேரடியாக ஜனாதிபதி கோட்டாபயவை நேரில் சந்தித்துப் பேசும் போது, அந்த அமைப்பு இலங்கையில் மேற்

* * *

ஐ.தே.கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுகின்றார் என்ற பேச்சுத் தொடருகின்றது. அவர் எப்போது பதவி ஏற்பார் என்பது மட்டும் தெரியவில்லை. அதுவும் பிள்ளையார் கலியாணம் மாதிரி நாளை, நாளை என்று தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றது.

ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து, ஐக்கிய மக்கள் சக்தியாக உருவெடுத்து, பிரதான எதிர்க்கட்சியாக நிலைபெற்றிருக்கும் சஜித்தின் அணிக்குள் பிளவு என்றும் –

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சில எம்.பிக்களுடன் நாடாளுமன்றத்தில் தனிக்குழு அமைக்கலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே ரணில் இப்போது நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடிவு செய்தார் என்றும் –

தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் சில தெரிவித்தன.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி தாங்கள் ஒற்றுமையாக, ஐக்கியமாக, கட்டுக்குலையாமல் இருக்கின்றோம் என்ற முடிவை நேற்றுக் கூட்டம் கூட்டி, தீர்மானித்து அறிவித்து விட்டன. அதுவும் கொவிட் தொற்றுக் காரணமாக சஜித் பிரேமதாஸ நேரில் பிரசன்னமாகாத நிலையில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை ரணிலின் முயற்சிக்குப் பின்னடைவு என்கின்றன அந்த வட்டாரங்கள்.

அதனால் ரணிலின் நாடாளுமன்ற வருகை மேலும் பின்னுக்குப் போகலாம் என்றும் இப்போது கூறப்படுகின்றது.

பாவம் ரணில்...!

– மின்னல் –

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப் படுத்தல்மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 568 உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 259 ஆக உயர்வடைந்துள்ளது.

## பிரிட்டனில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதான செயற்பாட்டாளர் குலசேகரம் சதீஸ் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டு பிரித்தானியாவின் கொவிட் விதிமுறைகளுக்கு உட்பட்டு மெய்நிகர் வழி ஊடாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான சொக்கலிங்கம் யோகலிங்கம், ஆறு முகம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் மணிவண்ணன் ஆகியோரும் மனித உரிமை செயற்பாட்டாளர்களான கீத் குலசேகரம், கரோலின் றொபின்சன், எமிடோலி ஆகியோரும் பிரதான பேச்சாளர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். அதேவேளை நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களான டினேஷ் நவரத்தினம், விஜய் விவேகானந்தன், விசிதரன் சதாசிவம், விதுரா விவேகானந்தன், அனோஜன் சிவபாலன், கதாதரன் நாகராஜ், பிரசன்னா பாலச்சந்திரன், கபிலன் அன்புரத்தினம், சுபதர்ஷா வரதராசா, சிவனந்தராசா சிவதர்சன், கொளசிகன் சசிக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு எதிராக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சட்டப் போராட்டத்தில் தடையினை மறுபரிசீலனை செய்ய உள்துறை அமைச்சிற்கு சிறப்பு தீர்ப்பாயம் 90 நாள்கள் காலக்கெடு வழங்கியிருந்தது.

இக்காலக்கெடு நெருங்கி வரும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மூலம் நீதிமன்றில் பெறப்பட்ட வெற்றியை நடைமுறைப்படுத்தி அரசியல் வெற்றியாக மாற்றும் வகையிலேயே இந்த கலந்துரையாடல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலயம் என்ற பெயரில் இருந்த வேளை மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின்போது கீரமலையில் ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட பகுதி முழுமையாக மறைக்கப்பட்டும் காணப்பட்டது.

இதன் பின்பு மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தத்தை அடுத்து பல நிலங்கள் விடுவிக்கப்பட்டதை காரணமாக கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையில் விடுவிக்கப்பட்டதால் இந்த இடம் தொடர்ந்தும் கடற்படையினரின் பராமரிப்பிலேயே உள்ளது.

இதேநேரம் இந்த மாளிகையை வடக்கு மாகாண சபை பொறுப்பேற்க வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் அழைத்துச் சென்று கோரிக்கை விடுத்தபோது விக்னேஸ்வரன் மறுத்துவிட்டார்.

இதனால் தொடர்ந்தும் கடற்படையினரின் பிடியில் உள்ள இந்த மாளிகையை சர்வதேச விருந்தினருக்கான சந்திப்பு நிலையம் என்னும் பெயரில் இலங்கை முதலீட்டு சபை ஏலத்தில் வழங்கவுள்ளது.

ஜே/226 நகுலேஸ்வரம் கிராம சேவகர் பிரிவில் 50 ஏக்கர் நிலம் கடற்படையினர் வசம் உள்ள போதும் 7 ஏக்கர் நிலத்தில் 5 மாடி கட்டடத்தில் குறித்த மாளிகை அமைந்துள்ளது.

## ரணிலுடன் எவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஜித் அணியில் உள்ள சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர் எனவும், நாடாளுமன்றம் வரவுள்ள ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு நகர்வை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந் நிலையிலேயே மேற்படி தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

## தரம் 1 அனுமதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்கள் முன்னிலையில் கருத்துரைக்கும்போதே கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாடசாலை பாடப்புத்தகங்கள் அழிவடைந்துள்ள நிலையில் மாணவர்களுக்குப் புதிய புத்தகங்களை வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் முடிவு செய்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபருக்குத் தகவல் தெரிவித்த பின்னர், அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 31 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 05 பேரும், வவுனியா மாவட்டத்தில் 04 பேரும், மன்னார் மாவட்டத்தில் 09 பேரும். முல்லைத்தீவு மாவட்டத்தில் 06 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 31 பேரில் 26 பேர் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

## அதிபர் மக்ரோனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதிபர் தாக்கப்பட்ட காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. அதிபரைத் தாக்கியவரும் கூட்டத்தில் காணப்பட்ட மற்றொருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களது விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

கொரோனாத் தொற்றுக்குப் பின்பிரான்ஸில் உணவகங்கள் நேற்று திறக்கப்பட்டன. அதனையொட்டி உணவகங்களது உரிமையாளர்களைச் சந்திப்பதற்காக அரச தலைவர் நேற்று நாட்டின் தென்கிழக்கு நகரத்துக்கு விஜயம் செய்தார்.

நண்பகல் ஒரு மணியளவில் அங்கு பாடசாலை ஒன்றுக்கும் சென்ற அவர் பின்னர் அங்கிருந்து கிளம்புவதற்காகத் தனது காரை நோக்கிச் சென்றவேளை அவரைக் காண்பதற்காக பலர் வீதியில் காத்து நின்றனர். தனக்காகக் காத்து நின்ற அந்த மக்களுடன் உரையாடச் சென்ற சமயமே கூட்டத்தில் காணப்பட்ட இளைஞர் ஒருவர் திடீரென அவரை நெருங்கிக் கன்னத்தில் அறைந்தார்.

எதிர்பாராத விதமான அந்தத் தாக்குதலில் இருந்து மக்ரோன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டபோது அருகே நின்றிருந்த மெய்க்காவலர்கள் விரைந்து அவரைப் பாதுகாப்பாக அப்பால் அழைத்துச் சென்றனர்.

தாக்குதல் நடத்திய இளைஞர் ஒரு தீவிர வலதுசாரியாக இருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றது.

நாட்டின் தலைவர் உடல் ரீதியாகத் தாக்கப்பட்ட நேற்றைய சம்பவம் அரசியல் மட்டத்தில் பலத்த கண்டனத்துக்குள்ளாகி இருக்கின்றது. பல அரசியல் பிரமுகர்களும் உடனடியாகவே தங்கள் கண்டனக் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

நாட்டின் தலைவர் ஊடாக ஜனநாயகம் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளது என்று பிரான்ஸ் பிரதமர் ஜீன் காஸ்ரோ கண்டித்துள்ளார்.

பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிக்கலஸ் சார்கோஷி மீது 2011இல் இது போன்ற ஓர் உடல் ரீதியான தாக்குதல் நடத்தப்பட்டது. நபர் ஒருவர் சார்கோஷியின் சட்டைக் கொலரில் பிடித்துத் தள்ளித் தாக்க முற்பட்டிருந்தார்.

## ரணிலுடன் சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

'ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழு கூடி சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சித் தலைவர் என்ற தீர்மானத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியுள்ளனர். ஆனால், அதற்கு சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் ஆதரவளிக்கவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களில் 10 பேர் ரணிலை ஆதரித்துக் கையொப்பமிட்டுள்ளனர். இதன்மூலம் அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இன்னும் ஒரு வாரகாலத்தில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வருவார். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவர்.

இப்போதும் பிரபல ஹோட்டல் ஒன்றில் முக்கிய சிலர் ரணிலுடன் பேச்சு நடத்துகின்றனர் என அறிந்துகொண்டேன் – என்றார்.

# திருமலை புதுக்குடியிருப்பு முதியவர்களுக்கு நேற்று சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டது

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட்19 தடுப்பூசிகள் ஏற்றும் பணி தற்போது இடம் பெற்று வருகின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்தும் முக மாக திருமலை பொது மக்க ளுக்கும்முதற்கட்டமாகமுதலா வது சினோபோர்ம் டோஸ் ஏற்றப்படுகிறது.





திருகோணமலை மாவட டம் தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் உள்ள முதி யோர்களுக்காக நேற்று (செவ்வாய்க்கிழமை) தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு தம்பலகாமம் குளக்கோட்டன் பாடசாலையில் இடம்பெற்றது. தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி ரவிந் திரராஜன் தலைமையில் இடம் பெற்ற குறித்த தடுப்பூசி ஏற்றல் நிகழ்வில் புதுக்குடியி ருப்பு கிராம சேவகர் பகுதி யை உள்ளடக்கிய 60 வய துக்கு மேற்பட்டோர்களுக்காக சுமார் 155 நபர்களுக்கு ஏற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

தம்பலகாமம் சுகாதார பிரிவில் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் தெளுங்கு நகரில் அதிக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப் பட்டமையையடுத்து முதற் கட்டமாக உரிய கிராம பிரிவுக் கான நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எதிர்வரும் காலங்க ளில் சிராஜ் நகர், முள்ளிப் பொத்தானை,கல்மெட்டியாவ போன்ற பகுதிகளுக்கும் சினோபோம் டோம் ஏற்றப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செய லாளர் இரா.பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உட்கெர மற்றும் பாதுகாப்பு படையினர், பொது சுகாதாரப் பரிசோத கர் கள் உள்ளிட்டோர்களும் கலந்து கொண்டார்கள்.

## கிளிநொச்சியில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு விசேட பொலிஸ் நடமாடும் பிரிவு கடமையில்!

கிளிநொச்சி நகரில் படிப்படியாக மக் கள் நடமாட்டம் அதிகரித்து வரும் நிலை யில் அதனை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் நடமாடும் பிரிவு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த திங்கட் கிழமை முதல் மக்கள் நடமாட்டம் படிப் படியாக கிளிநொச்சி மாவட்டத்தில் அதி கரித்து வருகின்றது. இந்த நிலையில் குறித்த மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கு பொலிஸாரும் படையி னரும் பல்வேறு நடவடிக்கைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் நடமாடும் பொலிஸ் பிரிவு திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்து பொருத்தமற்ற கார ணங்களுடன் நடமாடும் மக்களை எச்ச ரித்து திருப்பி அனுப்பி வருகின்றனர்.

தொடர்ந்தும் குறித்த நடமாட்டம் அதி கரிக்குச் சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை ளுக்கு உட்படுத்தப்படுவீர்கள் என பொது மக்களுக்கு பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டும் வருகின்றது.

அதேவேளை ஏ9 வீதியுடன் இணை யும் அனைத்து இணைப்பு வீதிகளிலும் படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இரணைமடு சந்தி, டிப்போ சந்தி மற்றும் கரடிபோக்கு சந்தி, பரந்தன் உள் ளிட்ட பகுதிகளில் வீதித் தடைகள் அமைக் கப்பட்டு மக்களின் தேவையற்ற நடமாட் டம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றமையு டன், சோதனைகளும் இடம்பெற்ற வரு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆயிரம் பேருக்கான தடுப்பூசி மட்டக்களப்பில் வழங்கல்

மட்டக்களப்பில் 1,000 பேருக்கான கொவிட் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்ட தாக அந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித் துள்ளார்.

கொவிட் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக் கைகள் தொடர்பாக வைத்தியர் நா.மயூரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் ஆகிய பகுதி களில், கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை கள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அந்தவகையில் மட்டக்களப்பு வின்சன்ட் மக ளிர் உயர் தேசிய பாடசாலையில் கொவிட் தடுப் பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று காலை, ஆரம்பித்து வைக்கப்பட்டன.



இதில் பிரதேச செயலகம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், உள்ளூராட்சிமன்ற ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளி லும் மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# கழிவகற்றல் தொழிலாளர்களின் சேவைகளுக்கு மதிப்பளியுங்கள்

### யாழ்.முதல்வர் கோரிக்கை



கழிவகற்றல் பணிகளில் ஈடுபடும் தொழிலா ளர்களின் சேவையை மதிக்க வேண்டுமென யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் – குருநகரிலுள்ள வெள்ள நீர் வடிகால், பிளாஸ்ரிக் உள்ளிட்ட கழிவுக ளால் நிரம்பி காணப்படுவதாக யாழ்.மாநகர சபை முதல்வருக்கு அப்பகுதி மக்கள் முறைப் பாடு தெரிவித்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய அப்பகுதி க்குச் சென்று பார்வையிட்ட முதல்வர், யாழ். மாநகர சபையை தூய்மைப்படுத்தும் தொழி லாளிகளுக்கு அறிவித்து வாய்க்காலை துப் புரவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டார்.

இதேவேளை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள வெள்ளநீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படுகின்றபோதும் கூட சிலர் பொறுப்பற்ற விதத்தில் தொடர்ந்து, கழிவுகளை கொட்டி வருகின்றனர் என யாழ்.மாநகர சபை முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த செயற்பாடு மிகவும் கவலையை ளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ்.மாநகர தூய்மைப்படுத்தும் தொழிலாளிகள், போதிய இயந்திர வலுக்கள் அற்ற நிலையில் மனித வலு ஊடாகவே துப் புரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின் றனர் எனவும் யாழ்.மாநகர் சபை முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே மக்கள் அனைவரும், அவர்களின் அர்ப்பணிப்பான தொழிலை மதித்தாவது துப்புரவு செய்த வாய்க்காலுக்குள் கழிவுகளை கொட்ட வேண்டாம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் சுற்றுலா மேற்கொள்ளும் வெளிநாட்டவர்கள்

கொழும்பு, ஜூன் 09

பிரான்ஸ் கடற்படை உறுப்பினர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கையின் சில இடங்களில் சுற்றுலா மேற்கொண்டனர்.

பிரான்ஸ் தூதரகத்தினூடாக வெளிவிவ கார அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைய பிரான்ஸ் கடற்படை உறுப்பி னர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்தார்.

அதற்கமைய, நாட்டுக்கு வந்த கடற்படை உறுப்பினர்களில் 101 பேர் யால சரணாலயத் துக்கும் 86 பேர் உடவலவ தேசிய சரணால யத்துக்கும் 235 பேர் ஹபரணை பிரதேசத் திற்கும் சுற்றுலா சென்றனர்.

பிரான்ஸ் கடற்படையினரின் சுற்றுலாப் பயணங்கள் அனைத்தும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேற்பார்வையில் இடம்பெறு கின்றன.

பிரான்ஸ் கடற்படையின் 750 உறுப்பினர் களை ஏற்றிய 02 கப்பல்கள் கடந்த திங்கட் கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந் தன.

இவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என அறிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரச பயங்கரவாதத்துக்கு சட்ட முலாம்

இலங்கையில் – ஏன் உலக அளவில் – மிக மோசமான சட்டமாகக் கருதப்படுவது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்.

மிருகத்தனமானது, மிலேச்சத்தனமானது, மனித நாகரிப் பண்பியல்புகளுக்கு மாறானது, கொடூரமானது, குரூரமானது என்று பலவாறு மோசமாக விவரிக்கப்படும் அபத்தச் சட்டம் அது.

சட்டத்தின் ஆட்சியை உதாசீனப்படுத்தி கொடுங்கோல் ஆட்சி முறையை – சர்வாதிகார எதேச்சாதிகாரத்தை – நீதியின் பெயரால், சட்டத்தி நாமத்தால், முன்னெடுக்கும் பெருங்கேலிக் கூத்து அது.

படையினரின் காவலில் சித்திரவதை செய்து எடுக்கும் ஒப்புதல் வாக்குமூலங்களை எதிரிக்கு எதிரான சட்ட ஆதாரமாக – சான்றாக – சாட்சியமாக – ஏற்று, குற்றத் தீரப்பளிக்கும் கொடூர விதிமுறைகளைக் கொண்ட கொடுங்கோல் சட்டம்.

ஆரம்பத்தில் ஓராண்டுக்குள், ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் என்ற 'பயங்கரவாதத்தை' முற்றாக அழிக்கும் ஒழிக்கும் நோக்கில் தற்காலிக ஏற்பாடுகள் சட்ட மூலமாகக் கொண்டு வரப்பட்ட இது, ஓராண்டுக்குப் பின் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டு இப்போது நான்கு தசாப்தங்கள் கடந்து விட்டன. இன்னும் அது நடைமுறையில் நீடிக்கின்றது.

இச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோரை நீதி விசாரணையின்றி பதினெட்டு மாதங்கள் வரைத் தடுத்து வைக்கும் அநீதியான முறைமைக்கு இந்தச் சட்டம் வழி செய்கின்றது.

கைது செய்யப்படுவோருக்கு எதிராகச் சித்திரவதைக்கு உள்ளாதல், மனச் சிதைவுக்கு உள்ளாகுதல், காணாமல் போதல், கொல்லப்படுத்தல் என்று மனித குலத்தின் பண்பியல்புகளுக்கு மாறான பெருங்கொடூரங்களும், குரூரங்களும், அரச பயங்கரவாதமாக அரங்கேறுவதற்கு உறுதியாகக் 'காப்பரண்' அளித்து நிற்கும் மிகமிக மோசமான சட்டம் இது.

ஐ.நா. மன்றங்களிலும், ஜெனீவாக் கூட்டத் தொடர்களிலும், மனித உரிமை அமைப்புக்களின் கலந்துரையாடல்களிலும் மிக மோசமான விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளான அடக்குமுறைச் சட்டம் இதுதான்.

இந்தச் சட்டத்தை உடன் விலக்கும்படி ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கையைப் பல தடவைகள் வற்புறுத்தி விட்டது.

இந்தச் சட்டம் மனித குல வாழ்வியலுக்கே மாறானது, மோசமானது என்று முன்னைய நல்லாட்சி அரசே ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் கூட்டத் தொடர்களிலும் சர்வதேசப் பொது நிகழ்வுகளிலும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அதனை அடியோடு மாற்றியமைப்போம் என சர்வதேசத்துக்கு உறுதியளித்தும் வந்துள்ளது.

இந்தச் சட்டத்தை அடியோடு மாற்றுவதற்கு நல்லாட்சி அரசு முன்வந்ததாயினும், அதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு, மாற்றுச் சட்ட மூலம் ஒன்று கொழும்பால் பிரேரிக்கப்பட்டது என்றாலும், அன்றைய அந்த நிலையோடு அதுவும் தடைப்பட்டுப் போய்விட்டது.

மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ராஜபக்ஷக்கள், பழைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கையிலெடுத்து, அதன் கீழான அதிகாரங்களை முழுமையாகப் பிரயோகித்துத் தமது இரும்புப் பிடிக் கைவரிசையைக் காட்டுவதில் தீவிரமாக இருக்கின்றனரே ஒழிய, அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க எண்ணவேயில்லை.

அந்தச் சட்டத்தின் கீழான அடக்குமுறையும், அதிகாரத் துஷ்பிரயோகமும், அடாவடித்தனப்போக்கும் தொடர்கின்றன. உரிமைகள், சுதந்திரம் குறித்துப் பேசுவோரை அடக்கி, ஒடுக்குவதற்கு நீதியின் – சட்டத்தின் – பெயரால் அராஜகம் முன்னெடுக்கப்படுதற்கு, வழி செய்யும் சட்டம் இதுதான்.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரைத் தடுத்து வைப்பதற்கான இடங்கள் முற்கூட்டியே வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டும் என்பது விதி.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் மீது அராஜகங்களும், அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் கட்டவிழும் பிரதான இடம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவு. நீதித்துறையின் நீதியான பண்பியல்பு தலைகாட்டாத ஓரிடம் இருக்கும் என்றால் அது அப்பிரிவுதான் என்று சொல்லலாம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி, கொடூரமான – வார்த்தைகளினால் விவரிக்கவே முடியாத – சொல்லொணா சித்திரவதைகளை எதிர்கொண்டு, தப்பிப் பிழைத்து உயிரோடு மீண்டவர்களின் மனப் பதிவு அந்தப் பிரிவின் குரூரத்தை விவரிக்கப் போதுமானது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாவோரை நிரந்தர மாகவே அப்பிரிவில் தடுத்து வைத்திருந்து கொடூரத்தைத் தொடருவதற்கு வழி செய்யும் ஏற்பாடு வர்த்தமானி மூலம் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டிருக் கின்றது.

ஹிட்லரின் நாஸி வதைமுகாமுக்கு நிகராக அதை நிரந்தரமாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல்தான் இப்போது வெளிவந்துள்ளது.

## மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு அனைவரும் இணைந்து வாருங்கள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சுகுணன்



பொது மக்களுக்கான தெளிவுபடுத்தல்களை நடைமுறை செய்ய கட்டமைப்பு ரீதியாக வைத்தியசாலைகளும், பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களும் முன்வர வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பணத்தை மட்டும் குறிவைத்து தங்களை நல்லவராகவும் மக்களை இரட்சிப்பவர்களாகவும் விளம்பரப்படுத்தி தகவல்களை மறைத்து நடைமுறைகளை மீறும் தனியார் கிளினிக் மற்றும் வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் மனமாற்றம் பெறவேண்டும். அவர்கள் தான் தற்போது ஊருக்குள் தொற்றுப்பரவ இடமளிக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தலைக்கவசம் அணிவது போக்குவரத்து பொலிஸாருக்காகத்தான் என்று நினைத்து கொண்டிருக்கும் சமூக ஒழுக்கம், புத்திசாலித்தனம் அதிகம் நிறைந்துள்ள நாட்டில் வாழ்கின்றவர்கள் நாம். அத்தோடு குறுக்கு வழிதான் பணம் சம்பாதிக்கும் விடயங்கள் என ஆற்றிக் கொள்ளவும் இங்கு தாரக மந்திரமாக பலருக்கு இருக்கிறது. இவையெல்லாம் இணைந்து தான் இந்த கொரோனா தொற்றை மக்கள் மத்தியில் பெருக வழிவகுக்கிறது.

தடுப்பூசி, பாதுகாப்பு முறைமைகள் வைரஸ் தொற்றுக்கான அடிப்படை விடயங்களாக இருந்தாலும், அவைகளை முற்றிலும் புரிந்தவர்களாக இருந்தாலும், நீங்கள் கூறும் விழிப்புணர்வை பெரியளவில் ஊடகங்களைத் தவிர வேறு யாராலும் ஏற்படுத்த முடியாது. இந்த விடயத்தில் ஊடகங்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது.

விதிகளை மீறி வீதியில் உலா வருகின்றவர்களுக்கு கட்டாய அன்டிஜன் சிலருக்கு செய்யப்படுவது உண்மைதான். அது அவசியமாக உணரப்பட்டதால்தான் இப்பிராந்தியத்தில் தேவையற்ற விதத்தில் வீதியில் உலா வருகின்றவர்களின் நடமாற்றம் குறைந்துள்ளது. 60 பி.எச்.ஐ களையும் 13 எம்.ஓ.எச். களையும் கல்முனை போன்ற பிராந்தியத்தில் வைத்துக் கொண்டு 5 லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் சார்ந்த அனைத்து விடயங்களையும் முகாமைத்துவம் செய்பவன் என்கிற ரீதியில் பகலிரவாக அரச ஊதியத்தை மட்டும் பெற்றுக் கொண்டு அவர்கள் கடந்த ஒரு வருடமாக படுகின்ற அவஸ்தை மட்டிலிட முடியாதது.

கீழ்த்தரமான விமர்சனங்கள், இனவாதம், பிரதேசவாதம் ஒருபுறம் இருக்க, மந்தைகளாக திரிகின்ற மனிதர்களை கட்டுப்படுத்த இராணுவ யுக்தியும் ஒரு போர்க்கால பேரிடர் முகாமைத்துவம் என்பதை புரியாதவர் யாரும் இருக்கப் போவதில்லை. விமர்சனங்கள் வைப்பதை 100 வீதம் ஏற்றுக் கொண்டாலும் எங்களது நடவடிக்கைகளை இப்போதைக்கு மாற்றிக் கொள்ள முடியாது.

கல்முனை பிராந்திய புள்ளிவிவரங்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் மிகச் சிறப்பான முறையில் காணப் படுவதற்கு எமது சுகாதார உத்தியோகத்தர் களது பாரிய அர்ப்பணிப்பு மிக்க சேவையே பிரதான காரணமாக அமைந்தது. ஒவ்வொரு பிராந்தியங்களும் இரண்டாயிரம் நோயாளி களுடனும் 100 மரணங்களுடனும் இருக்கும் போது கல்முனை பிராந்தியம் 400 நோயாளிகளையும் 07 மரணங்களையும் மட்டுமே மூன்றாவது அலையில் எதிர்கொண்டுள்ளது

## ஆடைத் தொழிற்சாலை பரவலால் இரண்டு மாத குழந்தைக்கு தொற்று

கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தைக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த குழந்தையின் தந்தை கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுபவர் என்றும் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி மற்றும் இரண்டு மாதக் குழந்தைக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் குழந்தைக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. தாய்க்கு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று இல்லை என முடிவு வந்த போதும் அவருக்கு இருக்கும் அறிகுறிகள் தொற்றுக்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மொத்தமாக 17 கடலாமைகள் இறந்து கரையொதுங்கள்

கடந்த சில நாள்களில் மொத்தமாக 17 கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று (செவ்வாய்கிழமை) காலை இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில் கல்பிட்டி முதல் அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதிகளில் ஆமைகளின் சடலங்கள் இருக்கின்றமையை கண்டறிய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன், கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை தொடர்பாக, நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் வனஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகள்குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், மூன்று டொல்பின்கள் இறந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரையொதுங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பு ஏ.யூ.எல். லங்கா நிறுவனத்தால் மாவட்ட செயலகத்தில் தொற்று நீக்கி விசிறல்



மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொவிட் தொற்று அதிகரித்துவரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு மாவட்டத்திலுள்ள அநேகமான தொண்டு நிறுவனங்கள் பாரிய பங்களிப்பை ஆற்றி வருகின்றன.

அந்த வகையில் அக்சன் யுனிட்டி லங்கா நிறுவனமும் பாரிய பங்காற்றி வரும் நிலையில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு பாரிய பங்காற்றிவருகின்றது.

அதனடிப்படையில் அக்சன் யுனிட்டி லங்கா நிறுவனத்தால் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

தொகுப்பு - P.S.V.தினேஷ் B.A(Hons) Geography Special., M.Phil in Geography.

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....

அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 15ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**141. உலகில் அகதிகளை பாதுகாப்பதற்கு உதவும் ஐ.நா. தாபனம்?**

**142. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தோற்றம் பெற்ற ஆண்டு ?**

**143. உலக சாரணர் இயக்கம் யாரால், எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?**

**144. Redd Barna அமைப்பின் தலைமையகம் அமைந் துள்ள நாடு மற்றும் நோக்கம்?**

**145. இலங்கையில் நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம்?**

**146. இலங்கையில் குறுகிய காலம் பிரதம பதவி வகித்தவர்?**

**147. சர்வதேச மனித விண்வெளி தினம்?**

**148. இலங்கை கிரிக்கெட் அணி ஒருநாள் உலகக் கோப்பையை கைப்பற்றிய ஆண்டு?**

**149. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?**

**150. இலங்கையின் முதல் தமிழ் பத்திரிகை எது?**

பெயர் :- ..................................................

அடையாள அட்டை:- ..................................

முகவரி :- ..................................................

மின்னஞ்சல் முகவரி:- ................................

தொலைபேசி இலக்கம்:- ............................

## 13ஆவது போட்டிக்குரிய பதில்கள்

121) 1893 Maradana Technical College

122) 99

123) 1972

124) Mexican Piso

125) 1957 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 31 (அ)

126) Yoctometer

127) Suraksa

128) ஒக்டோபர் 7

129) Habeas corpus ஆட்கொணர்வு ஆணை

130) 29.7%

**போட்டியில் பங்குபற்றுவோருக்கான அறிவிப்பு -**

நாளாந்தம் வெளிவரும் பொது அறிவுப் போட்டியில் அதிகமானவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

கேட்கப்படும் கேள்விகளுக்கு விடைகளை அனுப்புவது மட்டுமல்லாது உங்களுடைய விவரங்களை யும் தவறாது அனுப்பி வைக்கவும்.

# வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு மன்னாரில் நிவாரண உதவி வழங்கல்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று(செவ்வாய்க்கிழமை) வழங்கி வைக் கப்பட்டன.

அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஆகியவற்றுக்கு இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பணிப்பிற்கு அமைய, தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோவின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது முதல் கட்டமாக சவிரிகுளம், வங்காலை, தலைமன்னார் பியர் போன்ற பகுதிகளில் வசிக்கும் 107 குடும்பங்களுக்கு 1,500 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்த் வழங்கி வைத்தார்.

# பஸ் விபத்து; இருவர் காயம்



வெளிநாட்டில் இருந்து வருகை தந்த பயணிகளை தனிமைப்படுத்தலுக்காக ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் வவுனியா, ஓமந்தை, பனிக்க நீராவி பகுதியில் சென்ற போது நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சொகுசு பஸ் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய பயணிகளை அழைத்துக் கொண்டு கிளிநொச்சி, பூநகரி தனிமைப்படுத்தல் நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இதன்போது, ஏ9 வீதியில் ஓமந்தை, பனிக்கநீராவிப் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் விபத்திற்குள்ளாகியது.

குறித்த விபத்தில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

# 5 தனியார் நிதி நிறுவனங்களுக்கு வவுனியாவில் சீல் வைக்கப்பட்டது

வவுனியாவில் கொவிட் விதிமுறைகளை மீறி செயற்பட்ட 5 தனியார் நிதி நிறுவனங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) சீல் வைத்து மூடப்பட்டதுடன், ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடு பூராகவும் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மட்டும் அரசாங்கத்தால் பாஸ் வழங்கப்பட்டு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானாவடு தலைமையிலான பொலிஸ் அணியினரும், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி யூட் பீரிஸ் தலைமையிலான



சுகாதாரப் பிரிவினரும் வவுனியா நகரில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, அரசாங்கத்தின் கொவிட் சுகாதார விதிமுறைகளை மீறி பயணத்தடைக் காலத்தில் தனியார் நிதி நிறுவனங்களைத் திறந்து மக்களை அழைத்து நிதி நடவடிக்கைளை மேற்கொண்ட நிதி நிறுவனங்கள் சீல் வைத்து தனிமைப்படுத்தப்பட்டன. வவுனியா பஸார் வீதியில் இரண்டு நிதி நிறுவனங்களும், முதலாம் குறுக்குத்தெருவில் இரண்டு நிதி நிறுவனங்களும், ரயில் நிலைய வீதியில் ஒரு நிதி நிறுவனமும் என 5 நிதி நிறுவனங்கள் இவ்வாறு சீல் வைத்து மூடப்பட்டன. இதேவேளை, வவுனியா நகரையண்டிய பகுதிகளில் பல வர்த்தக நிலையங்களும் கடந்த சில நாள்களாக சீல் வைத்து மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (100)

# விற்கமுடியாத பழங்கள், மரக்கறிகளை அரசு மீளபெற்றுக்கொள்ளத் தீர்மானம்

விவசாயிகளிடம் இருந்து விற்கப்படாத பழங்கள் மற்றும் காய்கறிகளை பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அவற்றை கொரோனா சிகிச்சை நிலையங்கள், வைத்தியசாலைகள், இடம்பெயர்ந்தோர் மற்றும் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir



“ மே 31 ஆம் திகதி சம்பவத்திருந்த வன்செயல்களைத் தொடர்ந்து ஊடரங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டிருந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் யாழ். பொது நூலகம் அதனது 98 ஆயிரம் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளுடனும் 1981 ஜூன் முதலாம் நாள் நள்ளிரவினில் தீயினால் பொசுக்கப்பட்டது.’

# நூலக எரிப்பு வெளியுலகுக்கு அம்பலமானது எங்ஙனம்?

சீ.வீ.கே.சிவஞானம்
(அவைத் தலைவர், – வடக்கு மாகாண சபை.
மற்றும் முன்னாள் ஆணையாளர், யாழ். மாநகர சபை)



**1960** ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்றத் தொடங்கியதிலிருந்து 1989 ஆம் ஆண்டு முன்கூட்டியே ஓய்வுபெற்ற காலத்தில், மட்டக்களப்பு மாநகர சபையில் கணக்காளராகப் பணியாற்றிய 1968 - 1972 வரையான நான்கு ஆண்டுகள் தவிர முழுக் காலத்திலும் யாழ்ப்பாண மாநகர சபையில் சேவையாற்றியவன். அதிலும் குறிப்பாக 1975 முதல் 1988 இறுதிவரை ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் சேவையாற்றியவன். குறிப்பாக 1979 - 1983 நடுப் பகுதி தவிர, முழுக் காலத்திலும் தெரிவு செய்யப்பட்ட சபையின்றி மாநரக சபையை நிர்வகித்தவன். ஆகவே, யாழ்ப்பாண நூலகத்தின் அழிப்பு மற்றும் மீள்விப்பின் நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருந்தவன் நான். எனவே அதன் வரலாற்றில் நேரடி பற்கேற்பும், சாட்சியும் ஆனவன் என்ற வகையில் கடந்த காலத்தில் வேண்டப்பட்ட சரியான தெளிவுபடுத்தல்களை நான் வழங்கியே வந்துள்ளேன்.

ஆனால் இப்பொழுது உண்மைத் தரவுகள் திட்டமிட்டு திரிவுபடுத்தப்படுவது கவலையளிப்பதும் எரிச்சலூட்டுவதுமாக உள்ளது.

நூலகம் எரிக்கப்பட்ட நாள் எப்போது என்பதை ஒரு விவாதப் பொருளாக்கி பட்டிமன்றம் நடத்தும் நிலைக்கு ஒரு சிலர் உள்ளாக்கியுள்ளனர். யாழ்ப்பாண பொது நூலகம் பற்றி எழுதும் அநேகமானோர் அது எரிக்கப்பட்டது 1981 ஜூன் முதலாம் திகதி இராப்பொழுது என்று எழுதும்போது, ஒரு சிலர் இல்லை 1981 மே மாதம் முப்பத்தோராம் திகதி என எழுதி இளைய சந்ததியினரிடையே குழப்பத்தை உண்டாக்க முயல்கின்றனர்.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற நாச்சிமார் கோவிலடி கூட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் என்றும், இச்சூட்டுச் சம்பவத்துக்கு முன்னரே நூலகம் எரிக்கப்பட்டு விட்டதாகவும், மாவட்ட சபைத் தேர்தல் 1981 மே 31 ஆம் திகதி நடைபெற்றதென்றும் பல குளறுபடியான, பொய்யான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவை பற்றிய தெளிவுபடுத்தல்கள் பல ஊடகங்களுக்கு எம்மால் இம்முறை வழங்கப்பட்டுள்ளன. நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டம் என்பதும் யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981 ஜூன் மாதம் முதலாம் திகதி இரவோடு இரவாக எரிக்கப்பட்டதும், யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தல் 1981 ஜூன் நான்காம் திகதி நடைபெற்றதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதுவரை கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இரண்டு விடயங்களை எம்முடன் சம காலத்தில் மாநகர சபையில் சேவையாற்றிய தீவிர தமிழ்த் தேசிய உணர்வாளரும், தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவருமான உரும்பிராய் சா.ஆ.தருமரத்தினம் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் அப்படியே தரப்படுகின்றன.

## நூலக எரிப்பு பற்றிய செய்தி வெளியிடப்பட்டமை

’1981 யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபைத் தேர்தல் அசம்பாவிதங்களின் போது தேர்தல் கடமை புரிவதற்காக அனுப்பப்பட்டிருந்த விசேட காவல்துறையினர் யாழ்.விளை யாட்டரங்கிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். *மே 31 ஆம் திகதி சம்பவத்திருந்த வன்செயல்களைத் தொடர்ந்து ஊடரங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டிருந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் யாழ். பொது நூலகம் அதனது 98 ஆயிரம் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளுடனும் 1981 ஜூன் முதலாம் நாள் நள்ளிரவினில் தீயினால் பொசுக்கப்பட்டது.’*

‘அப்பொழுது யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டு வந்த ஒரே நாளேடான ’ஈழநாடு’ பத்திரிகையும் சம காலத்தில் அதே இரவில் எரிக்கப்பட்டிருந்தமையினால் தலைநகர் கொழும்பில் இருந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஒன்றுதானும் யாழ். பொது நூலகம் தீக்கு இரையாக்கப்பட்ட செய்தியை பிரஸ்தாபியாது இருந்தமையினால் யாழ். நகருக்கு வெளியே யாழ்ப்பாண மாவட்டத்திலும் கூட வெறும் வதந்தியாக அது பரவியிருந்ததே தவிர செய்தியாக பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கவில்லை.’

‘தீவின் எந்தவோர் ஊடகம்தானும் யாழ்.பொது நூலகம் தகனம் செய்யப்பட்டமையைச் செய்தியாக வெளியிடாதிருந்தமை கட்டுரையாளரைப் பெரிதும் வருத்திற்று. ஆகவே, மனித உரிமை நலன்களின் மீது பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுபாடு கொண்டவராகப் பணியாற்றி வந்த பண்டத்தரிப்புச் சட்டத்தரணி பி.எவ். சேவியரிடம் கட்டுரையாளர் அந்த விடயத்தைச் சுட்டிய போது இன்று மாலை 5.00 மணிக்கு முன்பாக யாழ். பொது நூலகத்தின் எரிந்து போன பாகங்களைக் காண்பிக்கும் ஒளிப்படப் பிரதிகளை என்னிடம் தருவாய் ஆகின் அவற்றிற்கான செலவினை யானே உனக்குத் தருவேன் என்றும், யாழ். பொது நூலகம் தகனம் செய்யப்பட்டதை உலகச் செய்தியாக மாற்றித் தருகிறேனா, இல்லையா பார் என எனக்குச் சவால் விட்டார் சட்டத்தரணி சேவியர்.’

‘கடற்படையினரது பிரசன்னத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ்.பொது நூலகத்தின் எரிந்து கொண்டிருந்த தோற்றத்தை காண்பிக்கும் ஒளிப் படங்களை தமது உத்தியோகத் தேவையின் பொருட்டாக எடுப்பித்திருந்தார் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம்.’

’அப்போது நிலவிய சூழ்நிலையில் யாரும் ஒளிப்படம் எடுப்பதற்கு யாழ்.பொது நூலகத்தை அண்மித்தல் அசாத்தியம் என்பதைப் புரிந்துகொண்ட கட்டுரையாளர் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தை அணுகி சட்டத்தரணி சேவியர் கட்டுரையாளருக்கு விடுத்திருந்த சாவலை எடுத்துரைத்திருந்தார். உடனடியாகவே தொலைபேசி மூலம் தமக்கு எரிந்து போன நூலகத்தின் பல்வேறு தோற்றங்களையும் ஒளிப்படப் பிரதிகளை எடுத்துத் தந்தவரிடம் அவற்றின் மற்றும் ஒளிப் பிரதியை தமக்கும் தரும்படி அவரை பணித்துவிட்டு தமது பாதுகாப்பில் வைத்திருந்த மேற்படி ஒளிப் படங்கள் உள்ளடக்கும் இரு புத்தகங்களையும் கட்டுரையாளரிடம் தந்தார். அவற்றில் இருந்து பெறப்பட ஒளிப்பட பிரதிகள் சட்டத்தரணி சேவியர் மூலம் அன்று மாலையே தலைநகர் கொழும்பு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் விமானத்தில் பயணித்த ஓர் இளம் சட்டத்தரணியிடம் சுங்கப் பரிசோதனைப் பீடத்தை அப்பயணி கடந்து சென்றதும் ஒப்படைக்கப்பட்டன. சென்னையில் மேற்படி ஒளிப்படங்களைப் பெற்றுக் கொண்ட மறவன்புல சச்சி (மறவன்புலோ சச்சிதானந்தன்) அவற்றிலிருந்து மேலும் பல பிரதிகளை அங்கு பெற்றுக் கொண்டதன் பின் தம்மால் கூட்டப்பட்டிருந்த சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் ஒளிப்படங்களை ஆதாரமாகச் சமர்ப்பித்து தகவல் வெளியிட்டிருந்தார். மறுவிநாடியே தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் பெரிதான திரவிட சிற்பவியல் பாணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த யாழ். பொது நூலகம் அதன் புத்தக சேர்வுகள் 98 ஆயிரம் தேடல்கரிய கையெழுத்து பிரதிகள் தீக்கிரையாக்கப்பட்டமை உலகச் செய்தியாக மாறிவிட்டது. மேற்படி தகவல் செய்தியாக வெளியிடப்பட்டிராத அச்சு, வானொலி, ஒளிபரப்பு ஊடகங்களே கிடையாது. சர்வதேச சஞ்சிகைகள் யாவும் அதனை முதன்மைச் செய்தியாக பிரஸ்தாபித்திருந்தன. மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்திடமிருந்து பெறப்பட்ட ஒளிப்படப் பிரதிகள் மூலமே அச்சாதனை நிலைநாட்டப்பட்டிருந்தது.’

## நட்டஈடு வழங்கல்

‘யாழ்.பொது நூலகத்திற்கு தனிநபர் ஆணைக்குழு (லயனல் பெர்னாண்டோ ஆணைக் குழு) பரிந்துரைத்திருந்த இழப்பீட்டுத் தொகை ஒரு கோடி 20 இலட்சம் ரூபா மட்டும் ஒரு கோடி 5 இலட்சம் (அவை போன்று அவ்வவாறாக) அரசாங்கப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. யாழ். பொது நூலகத்துக்கு அரசின் பணத்தி லிருந்து நட்டஈடு தரப்படுவது யாழ். பொது நூலகத்தைத் தகனம் செய்த குற்றப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருக்கும் என்பதால் போலும் அவற்றுக்கு மாறாக குடியரசு தலைவர் நம்பிக்கையை நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபா தொகையை விடுவித்து வங்கியில் குடியரசுத் தலைவரின் பெயரில் யாழ். பொது நூலகப் புனரமைப்பு நிதி எனும் ஒரு புதிய கணக்கினைத் திறந்து அதிலிருந்து பெறப்பட்ட 9 இலட்சம் ரூபாவிற்கான காசோலையை குடியரசுத் தலைவரின் நிவாரண நிதியாக அனுப்பியிருந்தார். ஆயின் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் பெறப்பட்ட அத்தொகைக்கான பற்றுச்சீட்டில் ’வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டின் ஒரு பாகமாகவே’ அதனை ஏற்றுக் கொண்டிருந்தார். பற்றுச்சீட்டில் அவ்வாறாக குறிப்பிட்டிருந்தார்.’

– என்று திரு. சா.ஆ. தருமரத்தினம் அவர்கள் 2013 இல் வெளியிட்ட தமது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இவர் இப்பொழுது கொழும்பில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு சிபார்சு செய்த நட்டஈடான ஒரு கோடி 5 இலட்சம் ரூபாவில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து 20 இலட்சம் ரூபாவே மாநகர சபைக்கு வழங்கப்பட்டது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத் தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.
‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.
இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப் புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனி தாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன் றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



அங்கம் 30

**97.ஒரு சின்ன தாயகத்தின் முதல் மந்திரியை வைத் துக் கொண்டுதான் இவற்றை அறிவிக்கிறேன் என்று அமிர்தலிங்கத்தைக் குறிப்பிட்டு பிரதமர் இந்திரா காந்தி கூறியமையுடன் அவரது மனத்தில் இருந்த கோலம் நிறைவுற்றதா?**

கூடியிருந்தவர்கள் ஓரளவு வரப்போவதை ஊகித்திருப்பார்கள். ஆனால் அவர் எண்ணியிருந்த மனக் கோலங்களின் புள்ளிகளும் கோடுகளும் தொடந்தன. இடையில் பூட்டாசிங் தலைமையில் நடந்த எதிர்க் கட்சி தலைவர்களின் சந்திப்பு நன்றாக முடிந்ததை அறிந்து கொண்டு அமிர்தலிங்கத்தை நாடாளு மன்றத்துக்கு வரவழைத்து பார்வையாளர்கள் பகுதியில் அமரச் செய்து விட்டு அங்கு உரை நிகழ்த்தினார் அன்னை இந்திரா.

அந்த உரையில், தமிழ் மக்கள் நடத்தப்படும் விதம் பற்றியும், அவர்களுக்கெதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்கள் எல்லாம் ஓர் இனப்படுகொலையின் அங்கங்களே என்று ஆணித்தரமாக அறிவித்தார். அந்தப் பேச்சின்போது அமிர்தலிங்கம் தன்னோடும், எதிர்க்கட்சித் தலைவர்களோடும் நடந்த பேச்சுக்களின் போது காட்டிய அரசியல் ஞானத்திற்கு (Statesmanship) உயர்ந்த பாராட்டுகளை தெரிவித்தபோது, அந்தப் பேச்சை மறுதலித்து எதிர்க்கட்சியினர் ஒருவரும் பேசவில்லை. இந்திரா காந்தியின் இந்தப் பேச்சைத் தொடர்ந்துதான் தமிழ் மக்களிடையே இருந்த கூட்டணியோ அல்லது விடுதலை அமைப்புகள் எல்லாமோ தமிழ் மக்களின் அவலங்களை இனப்படுகொலையாகக் காட்டத் தொடங்கினர்.

**98.திடமாக இனப்படுகொலைதான் என்ற கூற்றை முன்வைக்க இந்திராகாந்தி எங்கிருந்து தகவல்களை பெற்றார்?**

அவரது ஸ்ரீலங்காத் தூதரகம், நாட்டு நிலைமை பற்றி அனுப்பிய தகவல்கள், உளவுத் துறையின் அறிக்கைகள் பொதுவாக நிலையை தெரிவித்தாலும் அமிர்தலிங்கமும் அவருடனிருந்த ஏனையோரும் தமிழ் மக்கள் பட்ட மிருகத்தனமான அட்டூழியங்களுக்கு பல விவரங்கள் தந்தார்கள். அமிர்தலிங்கத்துக்கு இந்த சம்பவங்களின் விவரங்கள் எல்லாம் அத்துப்படி. அவர் விவரித்த பலவற்றை – அவர் என்னுடன் சம்பாணைகளில் சொல்லியவற்றை – பகிர்தால் இது நீண்டு விடும். ஆனால் ஓர் இனப்படு கொலையின் நோக்கங்கள்(Intentions )அல்லது, அப்படி நடந்தாலும் அவை தொடர்பில் அரசு எடுக்க வேண்டிய பொறுப்புகளின் அக்கறையீனம், அவற்றையே தங்களது இனவெறிக்குப் பாவித்து தூபம் போடும் மனப் பான்மையை பிரதிபலிக்க சொல்லப்பட்ட ஒன்றைப்பார்க்கலாம்.

1977 இன் இனக் கலவரங்கள் நடந்து கொண்டிருந்த வேளைகளில் ஜே.ஆர். தனது தொலைக்காட்சி, ஊடகங்கள் வழியாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் வன்முறைகளில் பொலிஸாரும் சிங்களப் பொது மக்களும் தாக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டு சிங்களவரின் உணர்ச்சியைத் தூண்டினார்.

பின்னர் தொடர்ச்சியாக இந்த மாவட்டத்தில் இத்தனை சிங்கள மக்கள் இறந்தனர், இன்னுமொரு மாவட்டத்தில் இவ்வளவு தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர், இறந்தார்கள் என்று இது ஏதோ இரண்டு இனங்களுக்கும் இடையேயான யுத்தம் மாதிரி மதிப்பெண்கள் (Score - Card) தந்து கொண்டிருந்தார். அவற்றினால்சிங்கள மக்கள்தாங்கள்பாதிக்கப் படுகின்றனர் என்ற ஒரு பிரமையில் இருந்தனர். அந்த ரீதியில் 18 ஒகஸ்ட் 1977 திகதி மிகவும் பேசப்பட்ட, சர்ச்சைகளுக்குள்ளான செய்தியை இனத்துவேசத்தைத் தூண்டுவதற்காகத் திரிவுபடுத்தினார். இது மீகளாலாவ என்ற சிங்களப் பகுதியில், அனுராதபுரத்திற்கு அடுத்து நடந்தது. அவர் அறிவித்தது தமிழர்கள் அங்கு இரண்டு சிங்கள மக்களை அன்று கொன்று விட்டார்கள் என்பதே. சம்பவங்களின் விவரங்கள் தரப்படவில்லை. ஆனால் பேச்சின் தொனி தமிழ்மக்களின் கையோங்கி அவர்கள் இதை நடத்தியிருந்தார்கள் என்று கருத்து தெரிந்தது. அந்த பகுதியிலும் மற்ற இடங்களிலும் தமிழருக்கெதிரான வன்முறை இதனால் எகிறியது.

நடந்த சம்பவங்கள் உண்மையாயினும் சம்பந்தப்பட்டவர்களின் நன்மை கருதி பெயர்களை தவிர்க்கிறேன். அந்த கால பகுதியில் மகாவலி அபிவிருத்தி வாரியத்திற்காக (Mahaweli Development Board) குறிப்பிடத்தக்க தமிழர்கள் அனுராதபுரம், குருநாகல் சுற்றாடல் பகுதிகளில் பொறியியலாளர்களாகத் தொழில் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மீகநாணாவ பகுதியில் இருந்த இரு தமிழர்களுக்கு அவர்களது ஜீப் சாரதியான சிங்களவர்களிடமிருந்து அனுராதபுரத்தில் கலவரம் வெடித்திருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அவர்கள் மேலதிகாரிகளுக்கு தங்களுக்குப் பாதுகாப்புத் தருமாறு கேட்டார்கள். அவரோ அவர்கள் அரை மைல் தூரத்தில் இருக்கும் இராணுவ முகாமுக்கு போகுமாறு புத்திசொன்னார். அவர்கள் பயத்துடன் இருக்க அன்று 3 மணியளவில் இன்னும் தமிழ் பொறியியலாளர்கள் தங்களது குடும்பத்துடன் அண்டிகம பிரதேசத்தில் இருந்து வந்து தங்கள் இருப்பிடங்கள் தாக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்கள். ஆனால் அவர்களது மேலதிகாரியோ எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யாது, தான் இராணுவ முகாமுக்குப் போய் சொல்லுகிறேன் என்று கூறிச் சென்றுவிட்டார். எல்லோரும் அங்கிருந்த சிங்கள சாரதியில் நம்பிக்கை வைத்து அவரது வீட்டுக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கிருக்கும்போது இன்னும் இரு தமிழ்ப் பொறியியலாளர்கள் பாதுகாப்புத் தேடி வந்தனர்.

ஆயினும், தாக்க வந்த கூட்டம் அவர்கள் சாரதியின் வீட்டில்தான் பாதுங்கியிருக்கிறார்கள் என அறிந்து அங்கு சென்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)



# கொவிட் தொடர்பில் எதிர்க்கட்சி மௌனம் காக்கின்றமையால் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்று அனுப்புகின்றோம்

## ஆசுமாரசிங்க இப்படி விளக்கம்

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் வாய்திறக்காததன் காரணமாகவே எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்தோம் என அக்கட்சியின் உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவரால் வெளியிடப்பட்டுள்ள காணொலியில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய நாடாளுமன்றம் அதற்குரிய கடமையைச் செய்வதற்குத் தவறியிருக்கிறது. ஏனைய உலகநாடுகள் அந்நாடுகளின் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் ஊடாகவே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

இங்கிலாந்து, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, ஜப்பான், இஸ்ரேல், மலேசியா போன்ற நாடுகளின் அமைச்சரவை அந்தந்த நாடுகளின் சுகாதாரப் பிரிவினரிடம் ஆலோசனைகளைப் பெற்று செயற்பட்டது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியும் அமைச்சரவையும் சுகாதாரத்துறையினரின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைவாகவே செயற்பட வேண்டும்.

அதேவேளை இந்த நெருக்கடியை வெற்றிகொண்ட நாடுகள் எவையும் வைத்தியர்களிடம் மாத்திரம் பொறுப்பைக் கையளித்துவிட்டு, வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கவில்லை. எனவே எமது நாட்டின் நெருக்கடி



நிலைக்கு அமைச்சரவை பொறுப்புக் கூறவேண்டும்.

உலகின் அனைத்து நாடுகளிலும் அந்நாடுகளின் நாடாளுமன்றங்களே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடுமையாகப் போராடுகின்றன. மாறாக அனைத்திற்கும் ஒவ்வொரு ஆணைக்குழுக்களை நியமிப்பதன் ஊடாக மாத்திரம் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டிவிடமுடியாது.

அதேபோன்று நாடாளுமன்றத்தின் கட்சித்தலைவர்கள் அவ்வப்போது சந்தித்து இந்த விடயம் தொடர்பில் ஆராய வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சிக்குரிய தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு எமது கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க வருகின்றமை தொடர்பாக எதிர்க் கட்சியின் சிலர் அதீத ஆர்வத்தைக் காண்பிக்கிறார்கள்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் பேசாததன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்று எமது செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானித்தோம் என்று குறிப்பிட்டார்.

# இலங்கையின் பிரதமராக நாமலா? முற்றுப்புள்ளி வைத்தார் கெஹலிய

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளன என்பது உண்மைக்கு புறம்பான தகவல் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாமல் ராஜபக்ஷ அடுத்த ஆண்டு அல்லது அடுத்த பொதுத் தேர்தலுக்கு எப்போது வேண்டுமானாலும் பிரதமராக நியமிக்கப்படுவார் என்று சமூக ஊடகங்களில் செய்திகள் பரப்பப்படுகின்றன.

இந்த நிலையில், இதுதொடர்பாகத் தெளிவுபடுத்தியுள்ள



அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதுபோன்ற கூற்றுக்கள் வெறும் 'அரசியல் வாசகங்கள்' எனக் கூறினார்.

தற்போது பரவி வரும் கதைகளை நீங்கள் பார்த்தால், நாளை வேறு யாராவது நியமிக்கப்படுவதை நீங்கள் காணலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற கூற்றுக்களை ஊடகங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார்.

இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படாவிட்டால் அதை தீவிரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.

# மூன்றாம் வகுப்பு ஊடகவியலாளர்கள் என்று எவருமல்லர் என்கிறார் கெஹலிய

ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட்ட 'மூன்றாம் வகுப்பு' ஊடகவியலாளர்கள் என யாரும் அல்லர் என ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடக மாநாடொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத், கடந்த காலத்தில் கொல்லப்பட்ட சில ஊடகவியலாளர்கள் மூன்றாம் வகுப்பு ஊடகவியலாளர்கள் என விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் கெஹலிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஹேரத் கருத்துக்கள் தங்களைக் குறிக்கின்றன என ஊடகவியலாளர்கள் தங்களைத் தாங்களே எடுத்துக்கொண்டால், தான் அதைப் பற்றி வருந்துகிறேன் என்றும் எந்தவொரு உறுப்பினரும் மூன்றாம் வகுப்பு என்று அழைக்கப்படுவதை தான் விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஹேமந்த ஹேரத் தனது கருத்துக்களுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஊடக உரிமைகள் குழுக்கள் கோரியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மழை காரணமாக எண்ணெய்க் கசிவு; விசாரிக்க இரண்டு குழுக்கள் நியமனம்



நாட்டில் பெய்து வரும் கன மழை காரணமாக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய உலையில் இருந்து எண்ணெய் கசிந்த சம்பவம் குறித்து விசாரிக்க எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில இரு குழுக்களை நியமித்துள்ளார்.

மேலும் விசாரணை அறிக்கையை 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குறித்த குழுவிற்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர், அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

எண்ணெய் கசிவு காரணமாக ஏற்பட்ட சேதம் தொடர்பாக கணக்கிடப்படும் என்றும், நாளை (இன்று) முதல் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஸ்புட்னிக் வி தடுப்பூசி இலங்கைக்கு வரும்

## இராணுவத் தளபதி நம்பிக்கை

இரண்டாவது டோஸ் செலுத்துவதற்கு தேவையான ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி இலங்கைக்கு கிடைக்கும் என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் உறுதியளித்துள்ளார் என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை அல்லது இந்த வார இறுதிக்குள் குறித்த தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கும் என அவர் மேலும் கூறினார்.

மேலும் குறித்த தடுப்பூசி கண்டி மாவட்டத்திற்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## நெல் அறுவடையின் பின்னர் காணப்படும் வைக்கோலை எரிக்காமல் உழுதுபுரட்டி விடுதல்

எமது பெரும்பாண்மையான விவசாயிகள் அறுவடைக்குப் பின்னர் வயல்நிலங்களிலுள்ள வைக்கோலை எரிக்கும், பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள் எரிப்பதனால் பொட்டாசியம் மாத்திரமே அதிகளவில் மண்ணில்சேரும். காபன்மூலக்கூறுகள் சிலிக்கன் கூறுகள் இல்லாமல் போகிறது அறுவடைக்குப் பின்னரான மழையின்போது நிலத்தை உழுதுவிடுவதால் போசணை மூலங்கள் மண்ணிலையே இருக்கும்.தத்திதாக்கம் எரிவு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வயல்களை எரிப்பது அர்த்தமுடையது. இவற்றைவிட சாதாரணநிலைமைகளில் எரிப்பது போசணை இழப்புக்கே வழிவகுக்கும். தத்திதாக்கம் எரிவு நோய் போன்றவற்றால் பாதிக்கப்படாத வயல்களை எரிப்பது சட்ட விரோதமான செயலாகும்.எரித்தலுக்கு முன்னரான காலத்தில் நோயுற்ற நிலைமையை விவசாயபோதனாசிரியர் அவதானித்து அறுவடையின் பின்னர் எரிப்பதற்கு அனுமதி தருவார்"



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் விற்பனை நடவடிக்கைக்காக இன்று திறக்கப்படும்

## வர்த்தக அமைச்சர் பந்துல தெரிவிப்பு

மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக நாட்டில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்கள் இன்றும், நாளையும் திறக்கப்படும்.

அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும்வியாபாரிகள்மற்றும்அங்காடிவிற்பனையாளர்கள் தொடர்பில் உரிய சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் உள்ள உப்பு உற்பத்தி ஆலைகளை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகியுள்ள எம்.வி.எக்பிரஸ் பேர்ள் கப்பல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் உப்பு உற்பத்தியின் ஊடாக மோசடி செய்யத் திட்டமிட்டுள்ளார்கள்.

நாட்டில் உப்பு உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக வதந்தியைப் பரப்பி விட்டு அதனூடாக உப்பு இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளார்கள்.

இரண்டு வருட காலத்திற்கு தேவையான உப்பு நாட்டில் உள்ள அனைத்து உப்பு உற்பத்தி ஆலைகளிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே சந்தையில் உப்பு விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.உப்பு குறித்து வெளியான பொய்யானசெய்தியைமக்கள்நம்பக்கூடாதுஎன்பதற்காகவே உப்பின் விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் இன்றும், நாளையும் திறக்கப்படும். அனுமதி பெற்றுள்ள வியாபாரிகள் மாத்திரம் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் முழு நாடும், நாட்டு மக்களும் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் ஒரு சில வியாபாரிகள் அதிக இலாபமீட்டும் நோக்கில் கீழ்த்தரமான முறையில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்கின்றமைக் காண முடிகிறது.

அங்காடி விற்பனையில் ஈடுபடும் ஒரு சில வியாபாரிகளும் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்கிறார்கள்.



அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் அங்காடி விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் தொடர்பில் பொது மக்கள் நுகர்வோர் அதிகார சபையில் முறையிடலாம். – என்றார்.

# நாட்டில் உரப்பற்றாக்குறை வராது விவசாய அமைச்சர் உத்தரவாதம்

பெரும்போக பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. உரப் பற்றாக்குறை எக்காரணிகளுக்காகவும் ஏற்படாது.

தேசிய மட்டத்தில் இரசாயன உர உற்பத்திக்கான செயற்திட்டங்கள் தற்போது விவசாயத்துறை திணைக்களத்தின் கண்காணிப்புக்கு அமைய முன்னெடுக்கப்படுகின்றன என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

உரதட்டுப்பாடு குறித்து விவசாயிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் பற்றி வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இரசாயன உரம் இறக்குமதி கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. காபனேற்றம் செய்யப்பட்ட இரசாயன உரத்தை தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டது.

இரசாயன உரம் இறக்குமதி தடை செய்யப்பட்டதால் சிறுபோக பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரம் பாவனையில் தட்டுப்பாடு ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

பெரும் போக உற்பத்தியில் 8 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையையும், 15 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் மரக்கறி மற்றும் பழ உற்பத்திகளையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக உற்பத்திகளுக்காக காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கையிலான உரம் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையாக வழங்கப்படும். பெரும்போக விவசாய நடவடிக்கையின் போது உரத் தட்டுப்பாடு ஏதும் இனி ஏற்படாது.



காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கையிலான உரத்தை தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இயற்கை உரம் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் விவசாய திணைக்களத்தில் உற்பத்திகள் தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு தகவல்களைப் பதிவுசெய்ய வேண்டும்.

பாதுகாப்பான உணவுத் திட்டத்தை வெற்றிபெற செய்யும் அரசாங்கத்தின் செயற்திட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரம் இது வரையில் முழுமையாக வழங்கப்படவில்லை எனவும். காபனேற்றம் செய்யப்பட்ட உரங்களை அனைத்து பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்த முடியாது எனவும் பொலன்னறுவை, அநுராதபுர பிரதேச பெரும்போக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திடீரெனச் சோர்வடைந்த பின் வாழைச்சேனை சிறுவன் சாவு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – மஜ்மா நகர் பகுதியில் சிறுவன் ஒருவர் கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திங்கள் காலை 6 மணியளவில் திடீரென சோர்வடைந்தநிலையில்குறித்தசிறுவன்உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதினான்கு வயதுடைய முகம்மது இஸ்மாயில் முகம்மது பிர்னாஸ் எனும் சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் சிலவேளை பாம்பு தீண்டி உயிரிழந்திருக்கலாம் என்று குடும்பத்தினர் சந்தேகிக்கின்றனர் என மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஏ.எல்.சமீம் தெரிவித்தார்.

மரணமடைந்த சிறுவனின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# ஆயிரம் தேசியப் பாடசாலை அமைக்கும் திட்டம் ஆரம்பம்

நாட்டில் சகல வசதிகளுடன் கூடிய ஆயிரம் தேசியப் பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக 750 இற்கும் மேற்பட்ட மாகாண பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொவிட்டுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவை அரசு மேலதிகமாக ஒதுக்குவதற்கு தீர்மானம்

கொவிட்வைரஸ்பரவலைக்கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்துக்காக இதுவரையில் 28 ஆயிரத்து 600 கோடி ரூபா ஒதுக்கியுள்ள நிலையில் மேலும் 20 ஆயிரம் கோடி ரூபாவை மேலதிகமாக ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அரசாங்கம் தயாராகியுள்ளதாக தெரியவருகின்றது.

நாடளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட் – 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக அரசாங்கம் இது வரையில் 28 ஆயிரத்து 600 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அமைச்சரவை ஊடகப்பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நாட்டில் கொவிட் – 19 வைரஸ் பரவல் காரணமாக அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள், ஒரு சில துறைகளில் ஏற்பட்டுள்ள நட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாக நாட்டின் அத்தியாவசிய செயற்பாடுகளை கொண்டு செல்வதற்கென மேலும் 20 ஆயிரம் கோடி ரூபாவை (200 பில்லியன் ரூபா) ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



இதற்கான குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பணிப்பெண்ணாகக் குவைத் சென்ற மூன்று பிள்ளைகளின் தாய் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை ஓடாவியார் வீதியில் வசித்து வந்த பெண்ணொருவர் குவைத் நாட்டில் மரணமடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான 47 வயதுடைய அபூபக்கர் சித்தி பரீனா எனும் பெண்மணியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த பெண் சுமார் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் குவைத் நாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

இவ்வாறு அங்கு தொழில் புரிந்து வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை தூங்கிய நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார் எனத் தமக்கு குவைத் நாட்டிலிருந்து தகவல் கிடைத்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மரணமடைந்த பெண்ணின் உடலை குவைத்தில் நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என குடும்பத்தினர் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சமூக வலைத்தளத்தைக் கண்காணிப்பதால் ஊடகவியலாளர்களுக்குப் பாதிப்பு இல்லை



## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

போலிச் செய்திகளை வெளியிடும் சமூக வலைத் தளங்களைக் கண்காணிக்கும் தீர்மானம், நேர்மையாகச் செயற்படும் ஊடகவியலாளர்களைப் எந்த வகையிலும் பாதிக்காது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

சமூகவலைத்தளங்களைக் கண்காணிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

நாட்டில் உரிமையாளர்கள் யார் என்று உறுதிப்படுத்தப்படாத மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் 17 வீத மான சமூக வலைத் தளங்கள்இயங்குவதுகண்டறியப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக மூன்று வாரங் களுக்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போலிச் செய்திகளை வெளியிடும்சமூகவலைத்தளக்கணக்குகள் நேர்மையாகச் செயற்படும் ஊடகவியலாளர்களைப் பாதிக்கின்றது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# 20 தமிழ் அகதிகளை இன்று ஜேர்மன் நாடு கடத்துகின்றது

## ஒருவர் மட்டும் கடைசி நேரத்தில் விடுவிப்பு

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் 20 பேரை அந்த நாட்டு அரசு இன்று புதன்கிழமை பலவந்தமாக நாடு கடத்துவதற்கு முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மன் அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக அங்குள்ள தமிழர்கள் 2ஆவது நாளாக நேற்றும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இது ஜேர்மன் இவ்வருடத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பி அனுப்பும் இரண்டாவது நடவடிக்கை ஆகும். இந்த அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள போட்சைம் நகர் அகதி முகாமுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து மழை மற்றும் கடும் குளிருக்கு மத்தியில் அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இன்று மாலை அளவில் பிராங்போட் விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்படலாம் எனக் கருதப்படுவதால் இன்று மாலை அங்கும் போராட்டம் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த மார்ச் 13ஆம் திகதியும் 25 இலங்கைத் தமிழ் அகதிகளை ஜேர்மன் பலவந்தமாக நாடுகடத்தியிருந்தது தெரிந்ததே.

இன்று நாடு கடத்தப்படவிருந்த ஒருவர் பிறீமனில் உள்ள மனித உரிமைகள் அமைப்பின் முயற்சியால் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

# பட்டப்பகலில் வீடு உடைத்து கொள்ளையிட்ட 2 பேர் கைது

## திருடிய பொருள்களும் மீட்பு



யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் வீடு உடைத்து பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பட்டப்பகலில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. கடந்த ஞாயிற்றுகிழமை வீட்டில் உள்ளவர்கள் மருத்துவமனைக்குச் சென்ற சமயம் பார்த்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டை உடைத்து 2 மடிக்கணனிகள், 2 பெறுமதி வாய்ந்த தொலைபேசிகள், 2 சைக்கிள்கள் என மேலும் பல பொருள்களைத் திருடிச் சென்றனர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த விசாரணையில் இந்தத் திருட்டுடன் தொடர்புபட்ட இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் திருடப்பட்ட அனைத்துப் பொருள்களும் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணம், டேவிட் வீதி மற்றும் சாவகச்சேரியைச் சேர்ந்த 25 மற்றும் 27 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைது நடவடிக்கை யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

# மிருசுவிலில் பிள்ளையார் கோயில் இனந்தெரியாதோரால் இடித்தழிப்பு

யாழ்.தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் வீதியோரத்தில் காணப்பட்ட சிறிய பிள்ளையார் கோயில் நேற்றிரவு இனந் தெரியாதோரால் இடிக்கப்பட்டுள்ளது.

ஏ - 09 வீதியில் கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய அளவில் குறித்த பிள்ளையார் ஆலயம் காணப்பட்டது.

இந்நிலையில், இன்றுகாலையில் மக்கள் அவதானித்தபோது ஆலயம் இடிவடைந்து காணப்பட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசடியில் 203 பேருக்கு பி.சி.ஆர்.; இன்றிரவு பரிசோதனை முடிவுகள்

(ந.லோகதயாளன்)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசமான நல்லூர் – அரசடியில் நேற்று 203 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன.

குறித்த பிரதேசத்தில் ஏற்கனவே 76பேருக்குக்கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று 203 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன.

குறித்த மாதிரிகளின் பரிசோதனைகள் இன்று மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றின் பெறுபேறுகள் இன்றிரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இனப் படுகொலையும் ..........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**99.அவர்களுக்கு மாகாவலி அபிவிருத்தி வாரியத்தினாலோ அல்லது இராணுவத்தினாலே பாதுகாப்புத் தரப்பட்டதா?**

நடந்ததைப் பார்ப்போம். 6 பொறியியலாளர்களும் அவர்களது இளம் குடும்பங்களும் சாரதியின் வீட்டில் இருந்தனர். இராணுவத் தளத்துக்குச் சொல்கிறேன் என்று போன மேலதிகாரியின் சிலமனே இல்லை. தாக்குவதற்கான கூட்டம் வீட்டை அண்டியதும் ஆண்கள், பெண்களையும், பிள்ளைகளையும் குளியலறைக்குச் சென்று தாழ்ப்பாள் போடச் சொல்லிவிட்டு எல்லோருடைய தற்பாதுகாப்புக்கும் ஏதாவது வழி செய்ய முயன்றனர். அவர்களிடையே உத்தியோகப் பாதுகாப்புக்கு கொடுக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் இருந்தன. அவற்றில் ஒன்றை வாசலில் பாதுகாப்புக்கு நின்றவர் முன்னோக்கி வந்த கூட்டத்துக்குள் சுட்டார். ஆயின் அவர் தாக்கப்பட்டார். முற்றத்தில் துவக்கோடு போராடியபோது மேலும் சுட்டதில் இரு கலகக்காரர்கள் இறந்தனர். ஆனால் அவரும் அந்த இடத்தில் கொல்லப்பட்டார். கலகக்காரர் தொடர்ந்தும் தாக்கினர். ஆனால் மற்றத் துவக்கின் உதவியோடும் உடைந்திருந்த துவக்கோடும் பயம் காட்டி சில மணித்தியாலங்கள் தாக்குப்பிடித்தனர். சிங்கள மக்கள் இறந்துவிட்டனர் என்ற தகவலில் ஒரு ஜீப்பில் சில இராணுவ வீரர்களுடன் இன்னும் ஒரு பொலிஸ் ஜீப்பும் வந்தது. வந்தவுடன் அவர்கள் கேட்டது இரண்டு துப்பாக்கிகளையும் கையளிக்குமாறுதான். அவை கொலைகளுக்குச் சாட்சியமாகும் என்பதனால்தான். தாக்கப்பட்டவர்களைப் பற்றி எந்த அக்கறையும் காட்டப்படவில்லை. கொலைகள் நடந்தமையால் விசாரணைக்கு வருவோம் என்று சொல்லி இரண்டு இராணுவத்தினரையும் ஒரு பொலிஸ்காரரையும் விட்டுச் சென்றனர்.

**100.அந்தப் பாதுகாப்புப் போதுமானதாக இருந்ததா?**

எப்படிக் காணும்? இருவர் மரணித்ததால் ஊரோ அல்லோலகல்லோலப்பட்டது. சூரியன் மறைந்ததும் வீட்டில் வெளிச்சங்கள் அணைக்கப்பட்டன. கல்லாலும் பொல்லுகளாலும் வீடுகள் தாக்கப்பட்டன. கலகக்காரர்கள் ஓடுகள் பிரித்து ஏறி கூரை ஊடாகத் தாக்கத் தொடங்கினார். உள்ளிருந்தோர் கதிரைகளாலும் கட்டில் சட்டங்களாலும் தற்பாதுகாப்புத் தேடினார்கள். ஆனால் எல்லோரும் காயப்பட்டார்கள். பாதுகாப்புக்கு நின்றவர்கள் கட்டுப்படுத்தவில்லை. அவர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பயம் காட்டுவதற்காகவாவது சுடவில்லை.

தற்செயலாக அந்தப் பகுதியால் போய்க்கொண்டிருந்த ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜீப்பை விட்டு இறங்கி நிலைமையைக் கண்டு துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டார். கலகக்காரர்கள் ஓடி மறைந்தனர். அதன் பின் அவர் எல்லோரையும் குருநாகல் மாவட்ட அகதி முகாமுக்கு அனுப்ப ஒழுங்கு செய்து புறப்பட்டார். அவர்களின் இரத்தக் காயங்களுக்கு மீகாளாலவ ஆஸ்பத்திரியில் உடனடி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு தங்களின் அனுபவங்களால் குருநாகல் அகதி முகாமிலும் இருக்கப் பயமாக இருந்தது.

அங்கிருந்த அகதிகளை ஏற்றிச் செல்லும் பஸ்ஸில் யாழ்ப்பாணம் செல்லத் தயாராகினர். ஆனால் கையில் பணம் இல்லை. ஆனால் நடத்துனரோ கையில் பணம் இல்லை என்றால் பஸ்ஸிலிருந்து இறங்குமாறு கூறினார். பின் அங்கிருந்த மற்ற அகதிகள் காசு சேர்த்து அவர்களை பஸ்ஸில் ஏற்றி விட்டார்கள்.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த மாதிரி யாழ்ப்பாணத்தில் எல்லோரும் சிகிச்சை பெற்றனர். ஆனால் பணத்திற்கு வருவாய் இல்லை. அவர்களை மருத்துவ அடிப்படையில் ஓய்வு பெற சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. பின்னர் மகாவலி அபிவிருத்தி வாரியத்தின் தலைவருக்கு தங்கள் வெற்றிடத்துக்கு தமிழ் பகுதிகளுக்கு மாற்றும் படி கேட்ட கோரிக்கைகளை தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்தவில்லை.

ஜே.ஆரின் பேச்சில் தமிழர்கள் இரண்டு சிங்களவரைக் கொன்று விட்டார்கள் என்ற செய்தி பெரிதாக்கப்பட்டது. கொல்லப்பட்ட தமிழ் உத்தியோகத்தரைப் பற்றியோ சம்பவப் பின்னணி பற்றியோ ஏதும் இல்லை. பாதுகாப்புத் தரப்பில் நாலு பேருடன், நான்கு துப்பாக்கிகள் இருந்தும் ஒருவராவது அதனைப் பாவித்து கலகக்காரரை துரத்தவில்லை. தற்செயலாக வந்த ஒரு உத்தியோகத்தர் அதனைச் செய்தமையால் மற்றவர்கள் பிழைத்தார்கள். தமிழரது கையோங்குகிறது என்று இனக் குரோதத்தைத் தூண்டிய ஜே.ஆர். 1983 கலவரங்களின் போதும் அதே பாணியைப் பயன்படுத்தினார். தமிழர்களின் உயிர்களையோ, உடைமைகளைப் பற்றியோ தான் தற்போதைக்கு கவலைப்பட முடியாது என்று இனப் படுகொலைக்குத் தூண்டிய அடுத்த படிகள் எல்லாவற்றையும் அமிர்தலிங்கம் துல்லியமாக விளங்கப்படுத்தியமையால் இந்திரா காந்தி ஸ்ரீலங்காவில் நடக்கும் அட்டூழியங்கள் ஓர் இனப்படுகொலை என்றே பேசினார். அதனையே இந்திய அரசின் பிரதிநிதிகள் 1983 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை மன்றிலும் கடைப்பிடித்தார்கள்.

இவை எண்ணங்களும், நோக்கங்களும் ஓர் இனப்படுகொலை ஊக்குவிக்க நடைபெறுவதை வெளிக்கொணரும் அதேவேளையில், அதனைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பொறுப்பற்ற தன்மையையும் அக்கறையற்ற மனோபாவத்தையும் காட்டி நின்றன.